**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை– திருமதி.செ.மகாலட்சுமி, பி.ஏ.,எம்.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, வந்தவாசி**

**(திருவள்ளுவர் ஆண்டு 2057, விஸ்வாவசு வருடம், பங்குனி மாதம் 10ம் நாள்)**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24–ம் நாள் திங்கட்கிழமை**

**<u>அசல் வழக்கு எண்.31/2004</u>**

**<u>(CNR No.TNTM16-000083-2004)</u>**

கே.துரைசாமி கவுண்டர் ........ **வாதி**

**//எதிர்//**

1. மாணிக்க உடையார் (இறந்துவிட்டார்)
2. பழனி
3. கணேசன்
4. சார்பதிவாளர், பெரணமல்லூர்
5. பூங்கோதை
6. ஆணையாளர்,
   ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
   பெரணமல்லூர். ....... **பிரதிவாதிகள்**

இவ்வழக்கு கடந்த 23.03.2026 அன்று என்முன்னர் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றிந்த வழக்கறிஞர் திரு.பி.இராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3ஆம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றிந்த வழக்கறிஞர் திரு.இரா.மணி அவர்கள் ஆஜராகியும் வழக்கு நிலுவையில் இருந்த நிலையில் 1ம் பிரதிவாதி காலமாகிவிட்டதால் 1ம் பிரதிவாதியின் வாரிசு 5ம் பிரதிவாதியாக இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார். 1 முதல் 3 பிரதிவாதிகள்

தரப்பில் எதிர்பதிலுரை தாக்கல் செய்துள்ளபோதிலும் 3ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் தனது வக்காலத்தை வாபஸ் பெற்றுக்கொண்டதால் 3ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும் 4 முதல் 6 பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், 2ம் பிரதிவாதி எதிர்பதிலுரை தாக்கல் செய்திருந்த போதிலும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், வாதியின் வாதுரையை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும். . . .

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கு, வாதியும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து கடந்த 23.10.2003 தேதியன்று ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்த பத்திரப்படி வாதிக்கு, காலமான 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2 மற்றும் 5 பிரதிவாதிகள் கிரைய பாக்கிதொகை ரூ.14,700/- ஐ பெற்றுக்கொண்டு தாவா சொத்தினை வாதி பெயருக்கு பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்து சுவாதீனம் கொடுக்கும்படியும், அவ்வாறு பத்திரப்பதிவுக்கு 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2 மற்றும் 5 பிரதிவாதிகள் உடன்படாதபட்சத்தில் நீதிமன்றமே 2 மற்றும் 5 பிரதிவாதிகளுக்காக தாவா சொத்தினை வாதிக்கு, பத்திரப்பதிவு செய்து சுவாதீனம் அளித்து தக்க உத்தரவு பரிகாரம் கோரியும், தாவா சொத்தை 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2 மற்றும் 5 பிரதிவாதிகள் வாதியை தவிர வேறு எந்த நபருக்கும் யாதொரு பராதீனமும் செய்ய கூடாதென ஒரு நிரந்தர தடையுத்தரவு பிறப்பிக்கவும், தாவா சொத்து குறித்து 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2, 5 மற்றும் 6ம் பிரதிவாதி பத்திர பதிவுக்கு

வரும்பட்சத்தில் 4ம் பிரதிவாதி, வாதியை தவிர வேறு எவருக்கும் யாதொரு பத்திரப்பதிவும் செய்ய கூடாதென ஒரு நிரந்தர தடையுத்தரவு பிறப்பிக்கும்படிக்கும் தாவா செலவுகளை வாதிக்கு 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2 மற்றும் 5 பிரதிவாதிகள் கட்டிக்கொடுக்க உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும் இதர பரிகாரங்களுக்காகவும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வாதி தாக்கல் செய்துள்ள திருத்தல் வழக்குரையின் சுருக்கம்–</u>

**2.1)** தாவா ஷெடியூல் சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்தை 1ம் பிரதிவாதி வாதிக்கு ரூ.21,700/–க்கு விற்பனை செய்ய ஒப்புக்கொண்டு, 1ம் பிரதிவாதியும் வாதியும் கடந்த 23.10.2003–ல் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டனர் என்றும், அந்த கிரைய ஒப்பந்த ஷரத்துக்கு ஒப்ப 23.10.2003 அன்று ரூ.5,000/– அட்வான்ஸ் தொகையை பெற்றுக்கொண்டார் என்றும், மீதித்தொகையை வரும் 23.01.2004–க்குள் செலுத்தி வாதி பத்திரப்பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது என்றும், 1ம் பிரதிவாதி வாதியிடம் 25.12.2003–ல் ரூ.2,000/–ம் பெற்றுக்கொண்டு கிரைய தாவா அக்கிரிமெண்டில் எண்டார்ஸ்மெண்ட் செய்தார் என்றும், பின்னிட்டு கெடு காலத்திற்குள் பலமுறை வாதி, 1ம் பிரதிவாதியை அணுகி தாவா சொத்தை பத்திர பதிவு செய்து கொடுக்குமாறு கேட்டும் கூட பத்திர பதிவு செய்து கொடுப்பதாக நம்பகம் கூறி 1ம் பிரதிவாதி அலைக்கழித்து வந்தார் என்றும், ஆனால் 3ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி தப்பு கிரையம் செய்யப்போகிறார் என்று வாதிக்கு கடந்த 16.02.2004–ல் தெரிய வந்தது என்றும், இதனால் வாதி மிகுந்த அதிர்ச்சி அடைந்து 1ம் பிரதிவாதியை

அனுகிய போது அவர் பதில் கூறவில்லை என்றும், வாதி ஏற்கனவே செலுத்தியுள்ள அட்வான்ஸ் தொகை ரூ.7,000/— போக மீதமுள்ள ரூ.14,700/—ஐ தயார் நிலையில் வைத்துக்கொண்டு கெடு காலத்திற்கு முன்பாகவே 1ம் பிரதிவாதியை அணுகி பத்திரப்பதிவுக்கு பலமுறை அழைத்துள்ளார் என்றும், வாதி இப்போதும், எப்போதும் கிரைய பாக்கி தொகையுடன் பத்திர பதிவுக்கு தயாராகவே உள்ளார் என்றும், ஆயினும் கூடுதல் விலைக்கு ஆசைப்பட்டு 1ம் பிரதிவாதி தாவா சொத்தினை 3ம் பிரதிவாதிக்கு தப்பு கிரையம் செய்ய ஏற்பாடுகளை செய்துவிட்டார் என்றும், அவ்வாறு பிரதிவாதிகள் செய்துவிட்டால் வாதிக்கு ஈடு செய்ய முடியாத இழப்புகளும், கஷ்ட நஷ்டங்களும் ஏற்பட்டுவிடும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

**2.2)** வாதியிடம் 1ம் பிரதிவாதி கிரைய பாக்கி தொகை ரூ.14,700/—ஐ பெற்றுக்கொண்டு தாவா ஷெட்யூல் சொத்தை வாதி பெயருக்கு பத்திரப்பதிவு செய்து சுவாதீனம் கொடுக்க தக்க உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும் தாவா சொத்தை வாதியை தவிர 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் வேறு எவருக்கும் யாதொரு பராதீனமும் செய்ய கூடாதென ஒரு நிரந்தர தடையுத்தரவு பிறப்பிக்கும்படிக்கும் பரிகாரம் கோரி இந்த தாவா தொடரப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரைய ஒப்பந்தத்தில் 2ம் பிரதிவாதி சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்றும் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மகன் என்றும், இவர்கள் இருவரும் இந்து கூட்டுக்குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றும் 1ம் பிரதிவாதி கர்த்தாவாக இருந்து தாவா அக்ரிமென்டை ஏற்படுத்தினார் என்றும் 2ம்பிரதிவாதி 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து அட்வாண்ஸ் தொகைகளை பெற்றதுடன் 1ம் பிரதிவாதியின்

விற்பனையை அங்கீகரித்து சாட்சியாக கையெழுத்துகளை செய்துள்ளார் என்றும், எனவே சரியான நீதிமன்ற தீர்ப்பை பெறும்பொருட்டு 2ம் பிரதிவாதி இவ்வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்கபட்டுள்ளார் என்றும், 4ம் பிரதிவாதி சார்பதிவாளர் ஆவார் என்றும், வாதி, 4ம் பிரதிவாதியை 16.02.2004 அன்று அணுகி தாவா சொத்து குறித்து 1ம் பிரதிவாதி யாதொரு பத்திரப்பதிவுக்கு வந்தாலும் பத்திரப்பதிவு செய்ய கூடாதென கேட்டுக்கொண்டார் என்றும், ஆனால் 4ம் பிரதிவாதி நீதிமன்ற தடையாணை இல்லாமல் பத்திரப்பதிவை நிறுத்த முடியாது என்று கூறிவிட்டார் என்றும், அதற்கான எழுத்துமூல கடிதத்தை இத்தாவா தாக்கல் செய்யப்படுகிறது என்றும், அதை இத்தாவாவில் ஒரு அங்கமான பாவிக்க வேண்டியது அவசியம் என்றும் எனவே தாவா சொத்துக்கள் குறித்து வாதியை தவிர வேறு நபர்கள் பெயரில் யாதொரு பத்திரப்பதிவு செய்ய 1ம் பிரதிவாதியோ அல்லது அவரது ஆட்களோ வரும்பட்சத்தில் 4ம் பிரதிவாதி பத்திரப்பதிவு செய்யகூடாதென ஒரு நிரந்த தடையுத்தரவு பிறப்பிக்க வேண்டி இந்த தாவா தாக்கல்செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

**2.3)** தாவா நிலுலையில் இருந்த நிலையில் 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றும், அவரது வாரிசுகளில் அவரது மகன் ஏற்கனவே இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியாக உள்ளார் என்றும் அவரை தவிர அவரது மகள் பூங்கோதை என்பவர் இந்த வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், தாவா நிலுவையில் இருந்த நிலையில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் ஒரு பகுதியை 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துவிட்டார் என்றும், மேற்படி 3ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்துவிட்டார் என்றும், அதனால் 6ம்

பிரதிவாதி தரப்பினராக சேர்க்க மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் 6ம் பிரதிவாதி தரப்பினராக சேர்க்கப்பட்டுளார் என்றும், 3ம் பிரதிவாதியிடம் தானம் பெற்ற சொத்தை எவருக்கும் பராதீனம் செய்ய கூடாதென 6ம் பிரதிவாதி மீது பரிகாரம் கோரி தாவா திருத்தப்பட்டுள்ளது என்றும், எனவே வாதி தாவா சொத்தை கிரைய பாக்கி தொகை ரூ.14,700/-ஐ செலுத்தி கிரையம் பெற்றுக்கொள்ள எப்போதும் தயாராக உள்ளார் என்றும் எனவே 1ம் பிரதிவாதியும் அவரது வாரிசுகளான 2 மற்றும் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுக்க முன் வராததால் வாதி தாவா சொத்தை 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2,5 பிரதிவாதிகள் கிரைய பாக்கி தொகையை பெற்றுக்கொண்டு தாவா சொத்தை வாதி பெயருக்கு பத்திரப்பதிவு செய்து கொடுக்க உத்தரவிடும்படிக்கும் அவ்வாறு 2,5 பிரதிவாதிகள் உடன்படாத பட்சத்தில் நீதிமன்றமே கிரைய அட்வான்ஸ் தொகையை பெற்றுக்கொண்டு தாவா சொத்தை வாதிக்கு பத்திரப்பதிவு செய்து சுவாதீனம் அளிக்க உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும் 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2,5 பிரதிவாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதியிடம் தானம் பெற்ற 6ம் பிரதிவாதியும் தாவா சொத்தை வாதியை தவிர வேறு எந்த நபருக்கும் பராதீனம் எவ்விதத்திலும் செய்ய கூடாதென ஒரு நிரந்தர தடையுத்தரவு பிறப்பிக்கும்படிக்கும் தாவா சொத்து குறித்து 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2,5 பிரதிவாதிகள் மற்றும் 6 பிரதிவாதி பத்திரப்பதிவுக்கு வரும்பட்சத்தில் 4ம் பிரதிவாதி வாதியை தவிர வேறு எவருக்கும் பத்திரப்பதிவு செய்ய கூடாதென ஒரு நிரந்தர தடையுத்தரவு பிறப்பிக்கும்படிக்கும் மற்றும் இதர பரிகாரங்களுக்காகவும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 1,2 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிர்வழக்ரையின் சுருக்கம்–**

**3.1)** வாதியின் தாவா பொய்யானது, மோசவிதமானது, சட்டப்படியும் சங்கதிகள்படியும் செல்லத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும், பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை வாதியே நிரூபணம் செய்ய வேண்டுமென்றும், வாதி தாவா 3ம் பாராவில் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் உண்மையானது, ஆனால் தாவா 4ம் பாராவில் சொல்லியுள்ள கெடு காலத்திற்குள் வாதி பலமுறை 1ம் பிரதிவாதியை அணுகி பத்திரப்பதிவு செய்துகொடுக்குமாறு கேட்டும் பதிவு செய்து கொடுப்பதாக நம்பகம் கூறி 1ம் பிரதிவாதியை அலைக்கழித்து வந்தார் என்று சொல்லியுள்ளது உண்மையல்ல என்றும், உண்மை என்னவெனில் 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் அப்பா, பிள்ளைகள் இருவரும் அடுத்த வேளை உணவுக்கே வழி இன்றிதான் தாவா சொத்தை விற்க முனைந்து வாதியுடன் விற்பனை ஒப்பந்தம் செய்தனர் என்றும், விற்பனை ஒப்பந்தம் செய்தபோதே வாதியிடம் உணவுக்கும், மருந்துக்கும் வழி இல்லாமல்தான் தாவா சொத்தை விற்க முனைகிறோம் என்று சொல்லித்தான் வாதியுடன் விற்பனை ஒப்பந்தம் செய்யப்பட்டதாவும், விற்பனை ஒப்பந்தத்திலேயே என் குடும்ப செலவிற்காகவும் என் மனைவி வைத்திய செலவிற்காகவும் என்று வாசகம் எழுதப்பட்டுள்ளதிலிருந்தே இந்த உண்மையை அறியலாம் என்றும், இவ்வாறு மருந்துக்கு கூட வழியின்றி 1,2 பிரதிவாதிகள் பரிதவித்த நிலையில் தான் தாவா சொத்தை விற்பனை ஒப்பந்தம் செய்தார் என்றும், ஆனால் வாதி 1,2 பிரதிவாதிகளின் வறுமையையும், ஏழ்மையையும் புரிந்து கொண்டு பரிவுடன் நடக்கவில்லை என்றும், ஒப்பந்தத்தின்போது

வாதி ரூ.5,000/− முன்பணமாக கொடுத்தார் என்றும், மீதித்தொகையான ரூ.16,700/−ஐ கேட்டபோது 25.12.2003−ஆம் தேதியில் ரூ.2,000/− மட்டும் கொடுத்தார் என்றும், அந்த ரூ.2,000/−யும் 1,2 பிரதிவாதிகள் விற்பனை ஒப்பந்தத்தில் வரவு வைத்துக்கொண்டனர் என்றும், மீதி தொகை ரூ.14,700/−ஐ கேட்டு 1,2 பிரதிவாதிகள் வாதியின் வீட்டில் தவம் கிடந்தனர் என்றும், பலமுறை 1,2 பிரதிவாதிகள் வற்புறுத்தி கேட்டபோது வாதி மீதி பணம் ரூ.14,700/−ஐ தர இயலாது என்றும் கடனுறுதிச் சீட்டு எழுதித் தருகிறேன் என்று சொல்லிவிட்டதாகவும், வாதியின் கடனுறுதிச்சீட்டை வைத்துக்கொண்டு 1,2 பிரதிவாதிகள் மருந்தும் வாங்க முடியாது, உணவும் வாங்க முடியாது என்பதால் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

**3.2)** மேலும், 3ம் பிரதிவாதி 1,2 பிரதிவாதிகளுக்கு தேவையான பண உதவிகள் அனைத்தையும் செய்தார் எனவும், எனவே தாவா சொத்தில் ஒரு பகுதியை 3ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்ய 1ம் பிரதிவாதி முடிவெடுத்து ஊராட்சிமன்ற தலைவர் கார்த்திகேயன், முன்னால் ஊராட்சிமன்ற தலைவர்கள் அண்ணாமலை கவுண்டர், ரேணு கவுண்டர் ஆகியோர்கள் மூலம் பஞ்சாயத்து செய்தார் என்றும் பஞ்சாயத்தில் வாதி அட்வான்ஸ் தொகையை திரும்ப பெற்றுக்கொள்ளவும், ஆணடுக்கு 9% வட்டியுடன் திருப்பி செலுத்திவிடும்படியும் தாவா சொத்தை 3ம் பிரதிவாதிக்கே விற்றுவிடலாமென்றும் பஞ்சாயத்தில் முழு சம்மதம் கூறினார் என்றும், வாதி பஞ்சாயத்தில் சம்மதம் தெரிவிக்கவேதான் 3ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்றும், பின்னர் தாவா சொத்தில் 0.15 சென்ட் கிணற்றில் 1/3 பங்கை கிரையம் பெற்று இன்றுவரையில்

அனுபவித்து வருகிறார் என்றும், மீதி 13 சென்ட் நிலம் 1,2 பிரதிவாதிகள் வசம்தான் உள்ளது என்றும், பஞ்சாயத்து முடிவின்படி 3ம் பிரதிவாதி வாதியின் முன் பணத்தை ஆணடுக்கு 9% வட்டியுடன் திருப்பி அளிக்க சம்மத்திக்கிறார் என்றும், ஒப்பந்தப்படி செயலாற்றி மீதி பணத்தை முறையாக தராமல் ஏமாற்ற முயன்றது வாதியின் தவறு என்றும், வாதியின் தவறுக்கு 1,2 பிரதிவாதிகள் பொறுப்பாக்க இயலாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**4.** 1 முதல் 3 பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்திருந்த போதிலும் 3ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் 3ம் பிரதிவாதியின் வக்காலத்தை வாபஸ் பெற்றுக்கொண்டார். 1ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருந்த நிலையில் காலமாகிவிட்டார். 4 முதல் 6 பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். மேற்படி 2 மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் அவர்களுக்கெதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**5.** வாதி தரப்பில் வாதி தன்னை **வா.சா.1** ஆகவும், திரு.சுப்பிரமணி என்பவர் **வா.சா.2** ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். வா.சா.1–ன் சாட்சியத்தின் மூலம் **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>வழக்கு விசாரணை பற்றிய விவரம்:–</u>**

தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்றும், அந்த சொத்தை 1ம் பிரதிவாதி விற்க முன் வந்தபோது வாதி வாங்கிக்கொள்ள விருப்பப்பட்டு தாவா சொத்திற்கு கிரையதொகை ரூ.21,700/– என நிர்ணயம் செய்யப்பட்டு, 23.10.2003–ம் தேதியில் முன்பணமாக ரூ.5,000/–ஐ வாதியிடம் இருந்து 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டு ஒரு கிரைய ஒப்பந்தம் கடந்த 23.10.2003–ஆம் தேதியன்று வாதிக்கு 1ம் பிரதிவாதி ஒரு ரூ.10/– பத்திரத்தாளில் ஒரு பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தத்தை 23.01.2004–க்குள் மீதி கிரைய தொகையை பெற்றுக்கொண்டு வாதிக்கு 1ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு எழுதிக் கொடுத்துள்ளதாகவும், மீண்டும் 25.12.2003–ல் வாதியிடம் 1ம் பிரதிவாதி ரூ.2,000/– பெற்றுக்கொண்டு கிரைய உடன்படிக்கையில் எண்டார்ஸ்மெண்ட் செய்து கொடுத்துள்ளதாகவும், 23.10.2003 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தின்படி வாதியின் மீது கிரைய தொகையான ரூ.14,700/–ஐ பெற்றுக்கொண்டு பத்திரப்பதிவு செய்து தருமாறு 1ம் பிரதிவாதியை கேட்டதற்கு 1ம் பிரதிவாதி பத்திர பதிவு செய்து கொடுக்குமாறு நம்பகம் கூறி வந்தார் என்றும், ஆனால் 1ம் பிரதிவாதி ஒப்பந்தப்படி மீதி கிரைய தொகையை பெற்றுக்கொண்டு கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க முன்வரவில்லை என்றும், மேலும் 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு தப்பு கிரையம் செய்ய போவதாக கேள்விபட்டு 1ம் பிரதிவாதியிடம் வாதி கேட்டதற்கு எவ்வித பதில் கூறவில்லை என்றும், 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதியிடம் தாவா சொத்து குறித்து பத்திரப்பதிவு செய்ய கூடாது என எழுத்துமூல கடிதம் கொடுத்ததாகவும், 1ம் பிரதிவாதி கூடுதல் விலைக்கு ஆசைப்பட்டு தாவா சொத்தை விற்பனை செய்ய முயற்சித்தார் என்றும், வாதி ஒப்பந்தத்தை

நிறைவேற்ற தயாராக உள்ளதாகவும், ஆனால் 1ம் பிரதிவாதி அவர் தரப்பை நிறைவேற்றி கொடுக்க முன் வரவில்லை என்றும், வாதி பிராதிலும் அவரது சாட்சியத்திலும் குறிப்பிட்டுள்ளார். 1ம் பிரதிவாதி தன் தரப்பை நிறைவேற்றிக் கொடுக்க முன் வராததால் வாதி இந்த வழக்கை ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரியுள்ளார். பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராக தவறிய காரணத்தால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வாதி தரப்பில் வாதத்தை முன்வைத்து வழக்கில் கோரியபடி தீர்ப்பளிக்க கோரப்பட்டுள்ளது.

7. <u>இங்கு தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>

**வாதி வழக்கில் கோரியுள்ள ஏற்றுதை ஆற்றுக பரிகாரம் அடைய அருகதையுடையவரா?**

தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்றும், அந்த சொத்தை பிரதிவாதி வாதிக்கு கிரையம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டும், கிரைய தொகை ரூ.21,700/– என முடிவு செய்து அதில் முன்பணமாக ரூ.5,000/– வாதியிடம் 1ம் பிரதிவாதி அட்வான்ஸாக பெற்றுக்கொண்டு பத்து ரூபாய் பத்திர தாளில் ஒரு பதிவு செய்யபடாத கிரைய ஒப்பந்தத்தை எழுதி 1ம் பிரதிவாதி கொடுத்ததாகவும் அது **வா.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மீண்டும் 1ம் பிரதிவாதி வாதியிடம் கடந்த 25.12.2003–ஆம் தேதியில் ரூ.2,000/– பெற்றுக்கொண்டு கிரைய ஒப்பந்தத்தில் வரவு வைத்துக்கொடுத்துள்ளார் என்றும், அது **வா.த.சா.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பாக்கி கிரைய தொகையான ரூ.14,700/–ஐ பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுக்க முன் வரவில்லை என்றும், 1ம் பிரதிவாதி அதிக தொகைக்கு ஆசைப்பட்டு 3ம் பிரதிவாதி தாவா சொத்தை விற்பனை செய்ய முயற்சிக்கிறார் என்றும்,

வாதி 1ம் பிரதிவாதியை பலமுறை கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற அழைத்தும், 1ம் பிரதிவாதி அவர் தரப்பை நிறைவேற்ற முன்வரவில்லை என்றும், வாதி பிராதிலும், அவரது சாட்சியத்திலும் குறிப்பிட்டுள்ளார். பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வாதி தரப்பில் வாதத்தை முன் வைத்து வழக்கில் கோரியுள்ளபடி தீர்ப்பளிக்க கோரப்பட்டுள்ளது.

8. <u>வாதி தன்தரப்பை நிறைவேற்ற தயாராக இருந்தாரா? மற்றும் உள்ளாரா? என்பதை உற்றுநோக்க வேண்டியுள்ளது :–</u>

வாதி 1ம் பிரதிவாதியை அழைத்து மீதி கிரைய தொகையை பெற்றுக்கொள்ள கோரியும் கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டி அழைத்தும் 1ம் பிரதிவாதி அவர் தரப்பை நிறைவேற்றி கொடுக்க முன்வரவில்லை என்று குறிப்பிட்டு அவ்வாறே சாட்சியம் அளித்துள்ளார். வாதி மீதி கிரைய தொகையான ரூ.14,700/–ஐ செலுத்த தயாராக இருப்பதாகவும், கிரைய பத்திரம் எழுதி பெற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். வாதி 1ம் பிரதிவாதியை பல முறை அனுகியும் 1ம் பிரதிவாதி கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொடுக்க முன்வரவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை குறித்து 3ம் பிரதிவாதிக்கு தப்பு கிரையம் செய்யப்போவதாகவும், அதிக தொகைக்கு ஆசைப்பட்டு 3ம் பிரதிவாதிக்கு பாராதீனம் செய்ய முயற்சி செய்வதாகவும், வாதி அறிந்து கடந்த 17.02.2004–ஆம் தேதியின்று 4ம் பிரதிவாதியான சார்பதிவாளருக்கு தாவா சொத்தை குறித்து 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு பத்திரப்பதிவு செய்ய வரும்பட்சத்தில் பத்திரப்பதிவு செய்ய

கூடாதென ஒரு அறிவிப்பு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார், மேற்படி கடித்ததிற்குண்டான ஆட்சேபனையும் அதற்கான இரசீதும் வாதி தரப்பில் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தன் தரப்பை நிறைவேற்றிக்கொள்ள தயாராக இருந்தார் என்பதை வாதி தகுந்த **வா.சா.ஆ.2** சான்றாவணத்தின் மூலம் நிரூபித்துள்ளார். மேலும் வாதி தரப்பில் திரு.சுப்பிரமணி என்பவர் வா.சா.2 ஆக சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட தாவா கிரைய உடன்படிக்கைப்படியும் வாதி தாவா கிரைய உடன்படிக்கையை நிறைவேற்றிக்கொள்ள எப்போதும் தயாராக இருந்தார் என்பதை பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் அவர்களுக்கெதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 1ம் பிரதிவாதி தன் எதிர்வழக்குரையில் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் கிரைய ஒப்பந்தம் போட்டதை ஒப்புக்கொண்டுள்ளார். ஆக வாதியின் கோரிக்கையை பிரதிவாதிகள் மறுக்கவில்லை என்று தீர்மானிக்க வேண்டியுள்ளது. வாதி வா.த.சா.ஆ.1–ன்படிக்கு ரூ.5,000/– முன் தொகையாக செலுத்தியுள்ள நிலையிலும் மீண்டும் ரூ.2,000/– எண்டார்ஸ்மென்ட் செய்துள்ள நிலையிலும் பாக்கி கிரைய தொகை ரூ.14,700/– மட்டுமே உள்ளது என்று வாதி பாக்கி கிரைய தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய குறிப்பாணை தாக்கல் செய்து, அனுமதி பெற்று கடந்த 23.10.2025 தேதியில் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார். அதற்கான இ–செலானும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். வாதியின் சாட்சியத்தின் மூலமும் அவரது செயல்கள் மூலமும் வாதி தரப்பை நிறைவேற்றிக்கொள்ள தயாராகவும், சித்தமாகவும் இருந்தார் என தெரிய வருகிறது. வாதியின் கூற்றை பிரதிவாதி மறுக்க

முன் வராததால் வாதியின் கூற்றை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆக வாதி அவருடைய தயார் நிலையை நிரூபித்துள்ளார் என்றே ஏற்க வேண்டியுள்ளது. வாதி கோரியுள்ள பரிகாரத்தை மறுப்பதற்கு வேறு எந்த முகாந்திரமும் இல்லை. எனவே வாதி வழக்கில் கோரியுள்ளவாறு ஏற்றதை ஆற்றுதல் பரிகாரத்தை அடைய அருகதையுடவர் என தீர்மானித்து இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

9. தாவா உடன்படிக்கை சொத்தை 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு தப்பு பராதீனம் செய்ய முயற்சிப்பதாக வாதிக்கு தெரிய வந்துள்ள நிலையில் வாதி 1ம் பிரதிவாதியை அணுகி தாவா சொத்தை வாதியின் பேருக்கு தாவா கிரைய பாக்கி தொகையை பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுக்க கேட்டும், 1ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு காலம் தாழ்த்தி வந்தார் என்றும் 1ம் பிரதிவாதி அதிக தொகைக்கு ஆசைப்பட்டு தாவா கிரைய உடன்படிக்கை சொத்தை 3ம் பிரதிவாதிக்கு பத்திரப்பதிவு செய்ய போவதாக அறிந்த வாதி 4ம் பிரதிவாதியான பெரணமல்லூர், சார்பதிவாளரை அணுகி தாவா சொத்து குறித்து எவ்வித தவறான ஆவணமும் பதிவு செய்ய கூடாதென கேட்டுக்கொண்டதாகவும், ஆனால் 4ம் பிரதிவாதி நீதிமன்ற தடையாணை இல்லாமல் நிறுத்த முடியாது என தெரிவித்ததாகவும், இதனால் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை 3ம் பிரதிவாதிக்கு பத்திரப்பதிவு செய்துவிட வாய்ப்பு உள்ளது என்றும், அதனால் கடந்த 17.02.2004–ஆம் தேதி வாதி 4ம் பிரதிவாதிக்கு ஒரு எழுத்து மூல கடிதம் அனுப்பியுள்ளார் என்றும் அதற்கான இரசீதும் மேற்படி கடிதத்திற்கு 4ம் பிரதிவாதி வாதிக்கு நீதிமன்ற தடையாணை இல்லாமல் பத்திரப்பதிவு நிறுத்த முடியாது என்று கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி ஆவணம் வாதி

தரப்பில் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதி தரப்பு சான்றாவணத்தின் அடிப்படையில் இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்கையில் தாவா கிரைய உடன்படிக்கை சொத்தை 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு பராதீனம் செய்ய முயற்சித்திருக்கின்றார் என்பதை அறியமுடிகிறது. எனவே வாதி தாவா உடன்படிக்கை சொத்தை 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எவ்வித பராதீனமும் செய்ய கூடாதெனவும் அவ்வாறு செய்ய முற்படும்பட்சத்தில் அதனை 4ம் பிரதிவாதி பதிவு எதுவும் செய்ய கூடாதென நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்றும் வாதிட்டார். மேற்படி வாதியின் வாதத்திற்கு பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராக சாட்சி மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகவே உள்ளார்கள். மேலும் வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.த.சா.4 ஆவணமான 28.10.2004ஆம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தினை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கையில் வாதியின் வழக்கானது 19.02.2004–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ள நிலையில் தாவா சொத்து குறித்து 1ம் பிரதிவாதி வேறு எவருக்கும் வில்லங்கமோ, விற்பனையோ செய்ய கூடாதென இந்த வழக்கிடை மனு எண்.54/2004–ல் இடைக்கால தடையுறுத்துக்கட்டளை உத்தரவு பெற்றிருக்கிறார் என்பதும் தெரிய வருகிறது. இந்நிலையில் வாதி தாவா தாக்கல் செய்த பின்னிட்டு கடந்த 28.10.2004 ஆம் தேதி 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு தாவா உடன்படிக்கை சொத்து குறித்து கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பது வா.த.சா.4 ஆவணத்தின் மூலம்

தெரியவருகிறது. சொத்து உரிமை சட்டம் பிரிவு 52 –ன்படி நிலுவையில் உள்ள ஒரு வழக்கில் அந்த வழக்கின் சொத்தை மாற்ற தடை செய்கின்றது. இந்த சட்டம் "Lis Pendens" என்ற தத்துவத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. சொத்து தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது அந்த சொத்தினை மாற்றம் முடியாது மற்றும் புதிதாக ஏற்படும் எந்த மாற்றமும் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உட்பட்டது என்பதே ஆகும். மாண்பமை உச்ச நீதிமன்றம் **"Shingara Singh Vs. Daljit Singh & 7 others" Civil Appeal No. 5919 of 2023** **என்ற வழக்கில்** “The doctrine of *lis pendens*, established by under Section 52 of the Transfer of Property Act, prohibits the transfer of property during the pendency of a suit and can apply even without registration of the suit in some cases, thereby binding subsequent purchasers to the final outcome of the litigation.” என்ற தீர்ப்பின் அடிப்படையில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் வழக்கு சொத்துக்களை விற்பனை செய்யும்பட்சத்தில் அதை வாங்குபவர்களையும் வழக்கின் முடிவானது கட்டுப்படுத்தும் என்றும் அதை செல்லாது பரிகாரம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. அதனடிப்படையில் **வா.த.சா.4** ஆவணமானது 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் ஆகும். வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள **வா.த.சா.5** ஆவணத்தை பரிசீலனை செய்கையில் மேற்படி 3ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியை 6ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த தான பத்திரத்தின் சான்றிட்ட நகலாகும். மேற்படி மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் 3ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மென்ட் ஆவணமானது செல்லதக்கதல்ல என்றே தீர்மானிக்க வேண்டியுள்ளது. வழக்கு

நிலுவையில் உள்ள நிலையில் தாவா சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணமும், 3ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மென்ட் ஆவணமும் வாதியை கட்டுப்படுத்தாது என்றும் அது செல்லதக்கதல்ல என வாதி பரிகாரம் கோரவில்லை என்றாலும் மேற்படி இரண்டு ஆவணங்களும் வதியை கட்டுப்படுத்தாது. மேலும் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு வா.த.சா.ஆ.4 ஆவணமான கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ள நிலையில் மேற்படி வா.த.சா.ஆ.4 வாதியை கட்டுப்படுத்தாது என்ற நிலையில் 3ம் பிரதிவாதி தனக்கு உரிமையில்லாத சொத்தை எவருக்கும் ஆவணம் ஏற்படுத்த முடியாது. மேலும் மேற்படி பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி தன் எதிர்வாதத்தை நிரூபிக்க தவறிவிட்டனர் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.** எனவே வாதி கோரிய பரிகாரமான தாவா சொத்தை குறித்து 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2 மற்றும் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தை வாதிக்கு தவிர வேறு எவருக்கும் எந்த விற்பனையும் செய்ய கூடாதென நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கதென்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேலும் இவ்வழக்கின் 4ம் பிரதிவாதி அரசு அதிகாரி என்பதால் அவருடைய வேலையை செய்யக்கூடாதென நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பிறப்பிக்க முடியாது. எனவே தாவா சொத்துக்கள் பொறுத்து வாதி கோரியுள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரமும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு வழங்கியுள்ளபட்சத்தில் தாவா சொத்து குறித்து 4ம் பிரதிவாதி வாதியை தவிர வேறு எவருக்கும் பத்திரப்பதிவு செய்ய

கூடாதென்ற நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கதல்ல எனவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>முடிவாக:–</u>**

**வாதியின் வழக்கு பகுதியாக அனுதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.**

i) காலமான 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2 மற்றும் 5 பிரதிவாதிகள் வாதி, நீதிமன்றத்தில் 23.10.2025 தேதியில் **Challan No.20251023007698**–ல் வைப்பீடு செய்துள்ள கிரைய பாக்கி தொகையான ரூ.14,700/–ஐ பெற்றுக்கொண்டு வாதியின் பெயருக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்து தாவா சொத்தை சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும்.

ii) இத்தீர்ப்பு தேதியிலிருந்து 2 மாதங்களுக்குள் இந்த தீர்ப்பை நிறைவேற்றிக்கொடுக்கும்படி எழுத்து மூலமான அறிவிப்பு அனுப்ப வேண்டுமென்றும், அவ்வாறு அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிறகும் 2 மற்றும் 5 பிரதிவாதிகள் அவர்களது தரப்பை நிறைவேற்ற தவறும்பட்சத்தில் வாதி அதிலிருந்து ஒரு மாதத்திற்குள் நிறைவேற்று மனு தாக்கல் செய்து நீதிமன்றம் மூலம் கிரைய ஆவணம் எழுதி பெற்று அதை தொடர்ந்து சுவாதீனம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும்,

iii) தாவா சொத்தை 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2 மற்றும் 5 பிரதிவாதிகள் வாதியை தவிர வேறு யாருக்கும் விற்பனை செய்ய கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பித்தும்,

iv) 4ம் பிரதிவாதியை பொறுத்து வாதி கோரியுள்ள நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து இவ்வழக்கு பகுதியாக தள்ளுபடி செய்யப்படுகின்றது.

v) 2,3 மற்றும் 5,6 பிரதிவாதிகள் வழக்கு செலவு தொகைகளை வாதிக்கு செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24–ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

MAHALAKSHMI C
Digitally signed by MAHALAKSHMI C
Date: 2026.03.24 17:32:52 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வந்தவாசி.**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:–</u>**

வா.த.சா.1 – துரைசாமி (வாதி)
வா.த.சா.2 – சுப்பிரமணி

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| வ.எண். | தேதி | விபரம் | ஷரா |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 23.10.2003 | 1ம் பிரதிவாதி, வாதி பெயருக்கு ரூ.21,700/–க்கு எழுதிக்கொடுத்த கிரைய அக்ரிமெண்ட் | அசல் |
| வா.சா.ஆ.2 | 25.12.2003 | 23.10.2003 தேதிய கிரைய அக்ரிமெண்ட் பின்பக்கம் ரூ.2,000/– செலுத்தியதற்கான செல்லு விவரம் | அசல் |
| வா.சா.ஆ.3 | 17.02.2004 | 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் வாதி கொடுத்த ஆட்சேபனை மனு பேரிலான கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.4 | 28.10.2004 | தாவா சொத்தினை 3ம் பிரதிவாதி கிரையம் பெற்றதற்கான கிரைய | சான்றிட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | பத்திரத்தின் சான்றிட்ட நகல் | நகல் |
| வா.சா.ஆ.5 | 22.12.2008 | 3ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மென்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் | சான்றிட்ட நகல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்–** இல்லை

MAHALAKSHMI C

Digitally signed by MAHALAKSHMI C
Date: 2026.03.24 17:33:15 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வந்தவாசி.**